[illegible]

N12 M02 Rabi 4930

ഫ

ന്ന211, N193A

M30.12.2

210783

REGD NO: M 1530.

# "BALAVINODHINI"







CHILDREN'S FRIEND

# பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

ஆசிரியர்:
வரகவி திரு. அ. சுப்பிரமணியபாரதி

Vol XII | FEB. 1930 | No. 2





PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet, MADRAS.



JUN 1930

*N. B:*—The Subscribers are *requested to pay subscriptions* to our agents only on obtaining our Bonafide receipts.

**All Rights Reserved by the Publishers.**

# பாலவிநோதினி

## CONTENTS—பொருளடக்கம்


| | பக்கம். |
|---|---|
| தெய்வ வணக்கம் ... ... ... | 49 |
| கல்விப் பொருட் சிறப்பு ... ... | 50 |
| ஹிதோபதேசம் ... ... ... | 51—53 |
| பழைய நாயே இப்படி கெட்டாயே ... | 54—58 |
| சாந்தசீலர் ... ... ... ... | 59—71 |
| உழவை விடச் சிறந்த தொழில் இல்லை | 72—76 |
| போர்க்களத்தில் பின்வாங்காத வீர தீரம் உள்ளவனே தனகர்த்தனுவன் ... | 77—79 |
| ஆடையாபரணம் ... ... ... | 80—83 |
| ஜால சம்பத்து ... ... ... | 84—86 |
| ஆகார நியமம் ... ... ... | 87—90 |
| ஓதுவ தொழியேல் ... ... | 91—92 |
| அதிக ஆசை அதிக நஷ்டம் (34ம்-பக்கத் தொடர்ச்சி) ... ... ... | 93—96 |


குறிப்பு:—எமது கையொப்பமிட்ட எமது கம்பெனி ரசீது பெற்றுக்கொண்டு ஏஜண்டுகளிடம் சந்தாத் தொகையைச் செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமற் போனால் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.


Sarma Bros
Vepery Madras

17 JUN 1930

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

அல்லது

# குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

| தொகுதி 12 | 1930 ஷு பிப்ரவரி மாதம் | பகுதி 2 |
| --- | --- | --- |

## தெய்வ வணக்கம்

சீர்பெருகும் ஆறுமுக கமலவழ குங்குழைச்
செவிகளீ ராறினழகும்
செவ்வரி பரந்த வீராறு விழியழகு மொளிர்
செம்பவள வாயினழகும்
தார்பரவு மார்பழகும் ஈராறுமேருநேர்
தடவரைத் தோளினழகும்
தகதகென நிலவுவடி வேலினழகுங் கமல
சரணமல ரிணையினழகும்
கார்பரவு விழிவள்ளி தெய்வகுஞ் சரியம்மை
கண்டு கண்டுள்ள மகிழக்
காதல்தருமானந்த ரூபனே யடியனைக்
காப்பதுன் கடனல்லவோ
பார்பரவு மெய்ஞ்ஞான பாநுவே பக்தபரி
பால னென மாரதுரையே
பழமறைகள் தருசீல மழவிடையர் அருள்பால
பழநிமலை முருகேசனே.

(பாரதி)

210783
சென்னை 600 008

## கல்விப்பொருட் சிறப்பு

தெள்ளமுதமனைய கல்விப் பொருள் படைத்திடில்
தேசமெல்லாந் துதிக்கும்
செயத் தம்பமான புகழ் நிலைநிற்கும் இவையெலாம்
செம்பொன்மிகு செல்வமேபோல்
வெள்ளமது கொளுமெனும் பயமில்லை கனலினால்
வெம்பவரு மூனமில்லை
வேந்தர்கள் பறித்திடக் கூடாது சோதரர்
விரும்பினும் பங்குறாது
கள்ளரால் திருடவும் முடியாது வரவரக்
கனமலாற் குறைவுறாது
கருணைஞானந் தழையும் அநுதினமும் உனையிதைய
கமலத்தில் வைப்பதெளிதாம்
வள்ளலென வருகின்ற மாடபூசியாதிபன்
மணவாள நாராயணன்
மனதுலுறை அலர்மேலுமங்கை மணவாளனே
வரத வேங்கடராயனே.

(மணவாளநாராயண சதகம்)

## ஹிதோபதேசம்

(1) கண்ணுக்கு அழகு கருணை. காலுக்கு அழகு பிறரிடம் ஏதேனுமொன்றை இரந்து கேட்பதற்குச் செல்லாதிருத்தல். ஆலோசனைக் கழகு இந்தச் செய்கை இவ்வளவானதென்று துணிந்து கூறுதல். பாட்டுக்கு அழகு கேட்பவர்கள் நன்று என மகிழ்தல். அரசனுக்கு அழகு தன் நாட்டிலுள்ளவர்களை வருத்தத்திற் குள்ளாக்காதிருத்தலாம்.

(2) கொன்று உண்பவனுடைய நாவானது எமதூதருடைய வாளினால் அறுபடும். பொய்ச் சாட்சிக்காக நியாய ஸ்தலத்துக்குப் போகிறவனுடைய நாவானது அற்று விழும். மிகவும் கற்றறிந்தவருக்கெதிரே கல்லாதவனுடைய நாவும் சாகும். கடன் கேட்க வந்தவனைக் கடன் வாங்கினவன் கண்டபோது அவனுடைய நாவும் சாகும். நல்லகுடியிலே பிறந்தவனொருவன் பிறர் செய்த நன்றியை மறவானாதலால் நன்றி செய்தவனிடம் ஒரு தவறுண்டான விடத்து அவன் செய்த நன்றியை உணர்ந்து குடிப்பிறந்தவனது நாவானது சாகும்.

(3) சிலந்திப் பூச்சிக்கு அதனுடைய முட்டையே எமன். கவரிமானுக்கு அதனுடைய மயிரே எமன். மிருகங்களுக்கு அவற்றினுடைய நீண்ட கொம்புகளே எமன். நண்டுக்கு அதனுடைய குஞ்சுகளே எமன். ஒருவனுடைய நாவிற்குப் பிறரை வசை கூறுதல் எமன்.

சிலந்திப்பூச்சி முட்டையிட்டவுடன் அழியும். ஆதலால் அதற்கு முட்டை எமனாயிற்று. மிருகங்களுக்கு நீண்ட கொம்பிருந்தால் அது மரங்கள் முதலியவற்றில் குத்தி முறிந்து அதனால் அவை வருந்தும். அன்றியும் அக்கொம்பு எவர் மேலாயினும் பட்டு அபாயம் விளைக்குமென்று அதனை அறுத்து விடுவதுண்டு. ஆதலால் நீண்ட கொம்பை அவைகட்கு எமனென்றார். கவரிமானானது தன் மயிர் எதிலேனும் பட்டு உதிருமாயின் உயிர் விடுமாதலால் அதன் மயிரே அதற்கு எமனாகிறது. நண்டு தன் குஞ்சுகள் வெளிப்பட்ட உடனே இறந்துபோகுமாதலால் அதற்கு அதன் குஞ்சுகளே எமனாகின்றன. பிறர்பழி கூறுவோன் அடையும் பயன் இம்மையில் பலராலும் இகழப்படுதலும் மறுமையில் கொடிய நரகமடைதலு மாதலால் ஒருவனுடைய நாவிற்கு வசை கூறுதலே நமனாகிறது.

(4) வெட்கமில்லாதவனுடைய அமைதியும். நல்லொழுக்கமில்லாதவனுடைய நல்ல நோன்பும், தனக்கே உண் பொருளில்லாதவன் செய்யும் உதாரத்துவமும், வன்மையில்லாதவனுடைய சேவகமும், செந்தமிழ்த் தேர்ச்சியில்லாதவன் கவி செய்தலும்— பயனற்ற செய்கைகளாம்.

(5) ஒருயிரைக் கொல்லுதல் ஒருவனுக்கு நஞ்சு. பிறிதொன்றின் தசையைத் தின்றல் கொடிய நஞ்சு. தனக்கு எதிராகாதவனை எதிர்த்து வெல்லுதல் நஞ்சு. தெளிந்த மதியுடைய ஒருவனை ஒரு காரியத்திற்கனுப்பாமல் காலதாமதஞ் செய்தல் நஞ்சு. புது உறவினர்மேல் ஆராயாது தீது கூறுதல் நஞ்சு. ஆதலின் இவ்வைந்து செய்கைகளையும் ஒழித்தல் வேண்டும்.



(6) சிநேகர்கள் துன்பமுறக் கண்டபோது அவர்களுக்கு உதவி செய்யாமலிருப்பது பெரிய பாவம் மனப்பொருத்தமில்லாதவரிடம் சினேகம் கொள்வது தீது. மனத் தூய்மையுடையவரது சிநேகிதத்தை விடுவது தீது. எடுத்துக்கொண்ட விரதத்தைச் செய்து முடிக்காமல் குறையாய் விடுதல் தீது.

(7) தன்னை மணஞ் செய்துகொண்ட கணவன் சொற்படி நடத்தல் மனைவிக்குரிய குணமாம். தந்தையின் சொற்படி நடத்தல் மகனுக்குரிய குணமாகும். போர்முனையில் சென்ற வீரன் பகைவரை வெல்லும் வழியையே நாடவேண்டும். இது அவன் வகிக்கவேண்டிய ப்ரதான குணமாகும். நாட்டைக் காக்கும் செங்கோல் அரசனுடைய சட்டத்திற்கு அடங்கி நடத்தல் குடிகள் வகிக்கவேண்டிய குணமாகும்.

(8) தனக்குப் பிறர் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளுதல் பெருமை. பிறர் செய்த தீதை நினைத்துக்கொண்டே இருத்தல் சிறுமை. தான் செய்த பிழைகள் மறையும்படி எல்லோரும் விரும்பத்தக்க நல்லவழியிலிருந்து வாழ்வது நன்மை. உதவி செய்தவரும் நலலவரும நகையாடாதிருக்கும்படி வாழ்வது மேன்மை.

---

## பழமொழிகள்.

(1) கெட்ட பெயர் ஒருபோதும் மறையாது.
A bad thing never die.

(2) போன மானம் மீண்டும் வராது.
A wounded reputation is seldem cured.

(3) கையிலிருக்கும் குருவி இரண்டு காட்டுக் குருவிக்குச் சமம்.
A bird in the hand is worth two in the bush.

(4) கருப்புக்கோழியும் வெள்ளை முட்டையிடும்.
A black hen lay white egg.

# பழைய நாயே இப்படி கெட்டாயே

முன் காலத்தில் ஒரு வனத்தில் அநுபமரென்னும் பெயர்கொண்ட ரிஷி யொருவர் பர்னசாலை கட்டிக் கொண்டு தவம் புரிந்து வந்தார். அவர் குற்ற மற்றவராயும் விரதசீலராயும் விளங்கினார். அந்தப் பெரியாரிடம் அக்காட்டில் வசித்த விலங்குகளெல்லாம் சிறிதும் அச்சமில்லாமல் வந்து விளையாடி மகிழும். அவரும் அம்மிருகங்களிடம் அன்பு பாராட்டிச் சில சமயம் விளையாடுவர். மிருகங்களில் புத்தியுள்ள சில அவருக்கு வேண்டிய உதவியும் புரிந்து வந்தன.

இவ்வாறிருக்கையில் ஒரு நாயானது காட்டில் பல இடங்களில் கஷ்டப்பட்டு மெலிவுற்று உணவு தேடிக் கொள்ளவும் வன்மையற்றதாய் இங்கே ரிஷியினுடைய ஆச்ரமம் வந்தது. கிருபைக்கடலாகிய அநுபமரிடம் வாலைக் குழைத்து வாய் விட்டிரந்து அவரை வணங்கியது. அந்தமகாநுபாவர் அந்த நாயினிடம் இரக்கங்கொண்டு அன்பு காட்டினர்.

நாய் ரிஷியுடன் கூடவே இருந்தது. அரைக்கணமும் அவரைவிட்டுப் பிரிவதில்லை. அவர் எழுந்தால் எழுந்திருக்கும்; நடந்தால் நடக்கும்; உட்கார்ந்தால் உட்காரும். அவர் படுத்தால் அதுவும் படுக்கும்; சந்தோஷம் வந்தபோது சந்தோஷக் குரைப்பு குரைக்கும். இப்படி அன்பு பாராட்டிய நாயை அவர் கருணையுடன் ஆதரித்து வந்தார். நாயும் ஆச்ரமச் சோறுண்டு நன்றாய் வளர்ந்து கொழுத்தது.



இப்படி யிருக்கையில் ஒரு நாள் ஒரு மான் தன் இனத்துடன் வெருண்டு தன் கொம்பைப் பூமியிலே தாழ்த்தி மருண்டு கும்மாள மிட்டபடி ஓடி வந்தது. அப்பொழுது அதன் எதிர்ப்பட்ட இந்த நாயைக் கொம்பினால் குத்திக்கொல்ல அது நோக்கியது. அதுகண்டு ரிஷி நாயின்மேல் தம்முடைய கமண்டல நீரைத் தெளித்தார். நாய் உடனே ஒரு பெரிய மானாய், தன் கொம்புகளசைய நிமிர்ந்து குதித்துத் தன்னை யெதிர்த்த மான்மேல் பாய்ந்தது. பாயவே, அந்த மான் பயந்து ஓடிப்போயிற்று. பின் அந்த நாய் மானாகவே இருந்தது. அந்த மான் ரிஷியினுடைய கால் மாட்டிலேயே சரணமடைந்திருந்தமையால் அந்தக்காட்டில் அதனை வேறெந்த விலங்கும் எதிர்க்க அஞ்சியது. சிவபெருமானுடைய சடையிலிருக்கும் பாம்பைக் கருடன் என்ன செய்யும்?

பின்னர் ஒரு நாள் அந்தப் பக்கமாய் வந்த வேங்கையொன்று மானைக் கண்டு சினங்கொண்டு மயிர் சிலிர்த்துத் தன் குரலிட்டுக் கூவி கண் சிவக்கக் கடைவாய் நக்கிப் பாயப் பார்த்தது. அதைக்கண்ட ரிஷி நாய்மானைக் கமண்டல நீர் தெளித்துப் பதினாறடி வேங்கை யாக்கினார். அதைக் கண்டதும் உண்மை வேங்கை பயந்து வாயு வேகமாக ஓடி எங்கேயோ மறைந்து விட்டது. அப்பால் அந்த நாய்வேங்கை வேங்கையாகவே இருந்து வந்தது.

பின்னரொரு நாள் அப்பக்கமாய் வந்த மதயானையொன்று நாய் வேங்கையைக் கண்டது. கண்டதும் சினந்து தன் ஒற்றைக் கரந் தூக்கி இரு கொம்பாட்டி, மும்மதம் பொழிந்து, மிருகங்களெல்லாம் அஞ்சி

நடுங்கும்படி ஆறாக் கோபத்துடன் அடர்ந்து, பதினாறடி வேங்கையை மோதியது. உடனே முனிவர் அந்நாய் வேங்கையைப் பெரிய மதயானை யாக்கி விட்டார். இந்த யானையைக் கண்டதும் அந்தயானை பயந்தோடி விட்டது. பின் அந்த நாய்மதயானை யானை யாகவே இருந்தது.

இப்படி யிருக்கையில் இன்னொரு நாள் அப்பக்கமாக வந்த ஒரு சிங்கமானது அதை எதிர்த்தது. அது கண்ட ரிஷி உடனே நாய்யானையைச் சரப மாக்கினார். சரபத்தைக் கண்ட வளவில் சிங்கம் தன்னைக் கண்டு அஞ்சும் யானையைப்போல் ஓடிமறைந்தது. ஆகா-என்ன சொல்வது-வல்லவனுக்கும் ஒரு வல்லவனுண்டு என்பது விளங்குகிற தல்லவா? இதனாலே தான் பெரியார் கொக்கைப்போல் அடங்கி யிருக்கின்றனர். அதனாலே அவர்களை எளியரென் றெண்ணும் மதியினர் அவமான மடைகின்றனர்.

அப்பால் அந்த நாய்ச்சரபம் சரபமாகவே இருந்தது. இவ்வாறு தன்னைப் பெருமைக் குள்ளாக்கிய ரிஷியினிடம்அந்த நாய் எப்படிப்பட்ட அன்பு வைக்க வேண்டும்? தன்னைப் படைத்த தெய்வத்தினிடம் அன்பனொருவன் வைக்கும் அன்பல்லவா வைத்து நன்றி பாராட்ட வேண்டும்? நாய் அற்ப குண முடையதாகையினால் அந்த விதமாய் நடந்து இன்னும் பெருமை அடைய எண்ணாமல், "நாமோ ஜாதியில் நாய்! இந்த மகானுடைய தவ மகிமையால் உயர்ந்த அந்தஸ்தை அடைந்திருக்கிறோம். ஒரு வேளை நமது செய்கை மாறுபட்டு இந்த ரிஷிக்குச் சினமுண்டா மாயின் நம்மை முன்போல் நாயாக்கி விடுவார். அப்



படி இவர் கோபத்திற் கிலக்காய்ப் பழைய நாயாவதைப் பார்க்கிலும் இவரை இப்பொழுது கொன்று விட்டால் பின்னால் நாம் ஒருவித இடையூறுமில்லாமல் சரபமாகவே இருந்து காலமுழுவதும் உற்சாகமாகக் கழித்து வரலாம்" என்று கருதி உற்சாகங் கொண்டு இறுமாப்பினால் பெரியாரை மதியாமல் இருந்தது.

அது கண்ட பெரியோர் சிந்தித்து அதனுடைய தீய எண்ணத்தை உணர்ந்தார்; "ஓ! குலத்தளவே யாகும் குணம்" என்பது கண்டோம். இதனுடைய இறுமாப்பை அடக்கவேண்டும். அற்பர்கள் பெருமைக்கு அருகராக மாட்டார்கள். அவர்கள் நட்பு பிராண சங்கடமாக முடியும். 'அற்ப சகவாசம் பிராண சங்கடம்' என்று கூறுகிறார்க ளல்லவா? 'நாய் தங்கத் தொட்டியில் உணவிட்டு வளர்த்தாலும் எச்சில் பொறுக்கவே முந்தும்' என்று கூறுவதும் சரியாய் விட்டது. கீழ் மக்களின் குணம் திரும்ப வேண்டுமானால் கண்டித் தடக்கி யாகவேண்டும். கண்டித் தடக்கினாலும் அவர்கள் மனம் நல்ல வழியை நாடுவதரிது. அற்பர்க்குச் செய்யும் உபகாரமும் சகாயமும் விழலுக் கிறைத்த நீராகுமே யல்லாது பயன்றரா. நல்லவர்களுக்குச் செய்யும் உபகாரமே தென்னை மரத்துக்கு இறைக்கும் நீர்போல் நல்ல பயனைக் கொடுக்கும்.

"அற்பர்கள் பலநாள் உதவி செய்த ஒருவனை ஒருநாள் உதவி செய்யாவிட்டால் வெறுப்பார்கள். பல நாள் செய்த உதவிகளை யெல்லாம் மறந்து, தீங்கு தேடிப் பிழைக்கப் பார்ப்பார்கள். இல்லா விட்டால் பகைவருடன் சேர்ந்து குடியையே கெடுக்கப் பார்ப்

பார்கள். ஆதலால் அற்பர்களுக்கு இடம் கொடுப்பது கூடாது" என்று கருதிச் சும்மா விருந்தார்.

இப்படி யிருக்கையில் நாய்ச்சரபமானது ஒரு நாள் நகத்தை விரித்து ரிஷியைக் கீறிக்கொல்லப்பார்த்தது. அது கண்ட ரிஷி *தண்டுன்றிநோக்கி, நகைத்து "பழைய நாயே இப்படி கெட்டாயே" என்றார். அக்கணமே நாய்ச் சரபம் பழைய நாயாய் விட்டது.

ரிஷி முக்காலமு முணரவல்ல பெரியாராகையினால் தமக்கு நேர விருந்த பேரிடரை முன்ன றறிந்து நீக்கிக் கொண்டார். வேறொருவரானால் அற்பர்களுக்கு இவ்வாறு இடங் கொடுத்துத் தப்புவதற்கு ஆகுமா? ஆகையினால் என்றும் அற்பர்களின் கூட்டுறவாகா தென்றுணர்க.

---

## இருசொல் அலங்காரம்

—:(o).—

(1) அழகியவீடு இடிவதேன்?
அஸ்தம் உச்சமாவதேன்? } உத்தரஞ் சாய்ந்து.

(2) ஆலிலை பறிப்பதேன்?
இராவழி நடப்பதேன்? } பறிப்பாரற்று.

(3) ஆலிலை பறிப்பதேன்?
அநுமார் இலங்கைக்குப்போவதேன்? } தையலை யிட்டு.

(4) ஏரி உடைவதேன்?
எச்சிற்டாக்குத் தின்பதேன்? } போக்கற்று.

(5) கொட்டில் அழிவதேன்?
குதிரைகள் துள்ளுவதேன்? } கட்டுவாரற்று.

(6) சீதையை இராமர்பிரிந்ததேன்?
துரியோதனனுக்கழிவு வந்ததேன்? } அம்மானை யிட்டு.

# 'நாகரிகம்' என்று நவில்வது யாது?

அல்லது

# சாந்தசீலர்.

"சத்தியந் தவந் தருமம் கண்ணோட்டம் தெய்வபக்தி
யுற்றிடலே நாகரிக மோர்."

பூர்வம் சேர தேசத்திலே திருவிதாங்கூரிலே சாந்தசீலர் என்ற அரசர் பெருமான் ஒருவர் இருந்தார். அவர் அக்காலத்திருந்த அரசர் அனைவரினும் ஏற்றமிக் குடையவர். தெய்வ பக்தியிற் சிறந்தவர். தம்மை வந்தடைந்தோரை ஆதரிக்கும் அருள் வள்ளல். கற்றறிந் தடங்கி நடக்கும் கண்ணிய புருஷர். சத்தியம், நாணம், பொறுமை, தவம், கொடை, கண்ணோட்டம், உத்தமமான மன்னிப்பு, பெரியோரைப் போற்றல், பெற்றோரைப் பேணல், ஸகோதர வாஞ்சை, முதலான அரும் பெருங் குணங்கள் அமையப் பெற்றவர். இக்கொற்ற மன்னர்பிரான் தம்மை ஒப்பாரும் மிக்காரு மிவ்வுலகில் இல்லை என்று சொல்லும் வண்ணம் தம் தேயத்தைச் செம்மையுற ஆட்சி புரிந்து வந்தனர்.

இச்சாந்தம் பொலிந்த நற்குண மன்னர் நாடோறும் அதிகாலையில் நித்திரை விட்டெழுந்து மிகுந்த பக்தியுடன் ஆண்டவனை மனமுருகப் பாடித் துதிப்பர். பின்னர் அன்று செய்யவேண்டிய வேலைகளுக்குத் தன்

மனத்திடமாக ஒரு திட்டம் அமைத்துக் கொள்வர். இருள்பிரிந்து கொஞ்சம் வெளிச்சமானவுடன் வெளிப் புறப்பட்டுச் சிறிது தூரம் சென்று, இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்துக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, எட்டு மணிக்கு வீடு திரும்புவர். வந்ததும் நீராடிச் சாதாரணமான உலர்ந்த வெள்ளை வஸ்திரம் தரித்து, முறைப்படி திரு நீற்றைப் பகவத் தியானத்துடன் திரிபுண்டரமாக அணிந்து திருமுருகாற்றுப் படையை உள்ளன்போடு பாராயணஞ் செய்வார். அங்ஙனம் அவர் பாராயணஞ் செய்து எழுந்திருப்பதற்குச் சுமார் ஒன்பதரை மணிக்கு மேலாகும். எழுந்தவுடன் தெய்வ சந்நிதானத்துக்குச் செல்வர். அங்கு அர்ச்சகப் பிராமணர் பூசை முடித்துத் தீர்த்தப் பிரசாதத்துடன் அரசரின் வருகையை எதிர் நோக்கியிருப்பர். அரசர் சென்றவுடன் தெய்வ சந்நிதியில் அகம் குழைந்து நெஞ்சுருகித் தோத்தரித்துக்கொண்டு கொஞ்சநேரம் ஈசனிடத்து மனம் ஈடுபட்டு நிற்பர். பின்னர்க் கடவுளைப் பணிந்து தீர்த்தப் பிரசாதத்தைப் பிராமணர் சாதிக்க அன்புடன் பெற்று, பிறவிப் பெரும் பிணிக்கு நன்மருந்தாகக் கருதி, பேரவாவோடு அதனை உட்கொள்வர். அப்பால் தன் கோயில் புக்குப் போஜன மருந்திச் சிறிது நேரம் இளைப்பாறியிருந்து பகல் பன்னிரண்டு மணிக்குத் தன் இராஜ்ய வேலைகளைக் கவனிக்கத் தொடங்குவர்; நாடோறும் இம்முறையினின்றும் சிறிதும் வழுவி நடவார்.

இவ்வருங் குணங்களை உடைய அரசர் பெருந்தகைக்குக் குணக்கேடனாகிய அற்பபுத்தி என்ற சகோதரன் ஒருவன் இருந்தான். அவன் படிப்பு



வாசனை அற்றவன்; கொஞ்சமேனும் தெய்வ பக்தி இல்லாதவன்; இரப்போரைத் தடிகொண் டடிக்கும் இயல்பினன். அவனை எப்பொழுதும் துஷ்டர்கள் பலர் மொய்த்துக்கொண்டு நிற்பர். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்; கற்பிலா மூர்க்கரை மூர்க்கரே முகப்பர்" என்பது உண்மையுரையே யன்றோ? அத்துஷ்டர்களின் சேர்க்கையால் 'குரங்குக்கு ஏணி வைத்துக் கொடுத்ததே' போன்று நாடோறும் அவனுக்குத் துர்க்குணங்கள் அபிவிருத்தி அடைந்துகொண்டே வந்தன.

'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையு'மன்றோ? அதிலும் நம் அற்பபுத்தி போன்றவர்களுக்குக் கேட்கவும் வேண்டுமோ? கெட்ட செயல்களுக் கெல்லாம் 'எள்' என்பதன் முன் 'எண்ணெ' யென்று நிற்பவனன்றோ அவன்? இப்படிப்பட்ட இவனுக்கு அத்துஷ்ட நண்பர்கள் "நீ உன் தமையனை எவ்வாறாகவேனும் முடித்து விடுவாயேயானால், பின் நீயே அரசனாயிருந்து அரசாளலாம். நாம் யாவரும் நம் மனத்தின்படி அன்புற்று இன்புற்று இருக்க இயலும். உன் தமையன் நமக்கெல்லாம் பெரும் 'இடறு கட்டையாக' இருந்துகொண்டு வருகிறான். ஆதலின் நீ இதற்கு ஏதாவது தக்க ஒரு வழி சீக்கிரத்திற் செய்து முடித்து நாட்டினைக் கைக்கொள்ள நாடு" என்று பல தரத்தும் வற்புறுத்திக் கூறுவாராயினர்.

அற்பபுத்தி, பொல்லானே எனினும் தன் தமையனிடத்து அன்புடையவன். குழந்தைப் பருவமுதற்கொண்டே சாந்தசீல மன்னரால் குழந்தை

போற் பாதுகாக்கப்பட்டவன். இவ்வாறிருந்தும் அப்புல்லோன் பொல்லோர்களின் சார்பினால் நல்லோனான தன் தமையனை - குணக் குன்றை - குடிகளின் கண்மணியை - பக்த சிரோமணியை - ஆருயிரின் தாயை - அறத்தின் பெருந் தவத்தை - பேரருளின் கண்ணை — சாந்தசீலப் பெருமானை வஞ்சனையாற் கொன்று விடுவதெனத் தீர்மானித்தான்.

பின்னர் 'எவ்வாறு கொல்வது' என்பதைப் பற்றிச் செவ்வையுற ஆலோசித்தான். எவ்விதத்தும் தன் தமையனைக் கொல்லுதற்குக் கூடாமலிருப்பதைக் குறித்து ஏங்கி மனம் வருந்தினான். இறுதியில் அவன் 'நமது தமையனோ பிரதி தினமும் சுவாமி தீர்த்தம் வாங்கிக்கொண்ட பிறகே தன் மற்ற கருமங்களைச் செய்வதற்குத் துவக்குகின்றான். ஆதலின் அர்ச்சகப் பிராமணனிடம் சென்று அவனை எவ்விதமாகவேனும், நம் வசமாக்கிக்கொண்டு, அந்தத் தீர்த்தப் பிரசாதத்தில் விஷத்தைக் கலந்து கொடுக்குமாறு செய்து கொன்றுவிடல் வேண்டும். இதுவே எளிய நேரிய வழி' என்று தன் மனத்தினிடமாகத் தீர்மானித்துக் கொண்டனன்.

உடனே அதிக அவசரமாக ஓடோடியுஞ் சென்று, அர்ச்சகப் பிராமணனிருக்கும் இடம் சார்ந்து, தன் கருத்தை நயமாகவும் உறுதியுடனும் அவனுக்கு அற்பபுத்தி வெளியிட்டான். அற்பபுத்தியின் இக்கடுமொழியைக் கேட்ட பிராமணன், "சிவ! சிவ!" என்று தன் செவிகளை இருகரங்களாலும் பொத்திக்கொண்டு, இளவரசராகிய அற்பபுத்தியை நோக்கி, "உமக்கென்ன



பயித்தியமோ? மூளை கொதிப்படைந்து விட்டதோ? பித்தம் அதிகமாகத் தலைக்கேறி விட்டதுபோலும்! என்ன பேச்சுப் பேசுகின்றீர்! உம்மைப் பெற்ற தந்தையினும் பதின்மடங்கு அதிகமான பிரியத்துடன் பாதுகாத்தவரன்றோ உம் தமையன்? தருமதேவதையன்றோ அவர்? "பாம்பிற்குப் பால் வார்க்க வார்க்கப்படு விஷத்தைக் கொடுக்கும்" என்பதுபோல் ஆயிற்றே செய்கை! அவரைக் கொன்று விடுவதற்கு எவ்வாறு உம் மனம் துணிந்தீர்? வேண்டாம் ஐயா! வேண்டாம்!! நான் சொல்வதைக் கேளும்" என்று பின்னும் மேலே சொல்லத் தொடங்கினான்.

இவ்வாறு இவன் மறுத்துப் பேசுவது இளவரசனுக்கு மிகுந்த ஆத்திரத்தை உண்டாக்கிற்று. அவனுக்குக் கோபம் உச்சிக்கு ஏறிவிட்டது. கண்கள் கொவ்வைப் பழம்போற் சிவந்தன. மீசை பட படவென்று துடித்தது. பல்லை நற நறவெனக் கடித்தான். அங்கம் பதற, ஆவேசத்துடன் அர்ச்சகப் பிராமணனை, பளார்! பளார்!! பளார்!!! என்று மூன்று நான்கு அறைகள் கன்னத்தில் அறைந்தான். அந்தோ! பாவம்! அர்ச்சகப் பிராமணனுக்குக் கடைவாய்ப் பற்கள் இரண்டு மூன்று பல பலவென்று உதிர்ந்து விட்டன. உதிரம் கள களவென்று பெருகி ஓடியது. கன்னங்கள் புரு புரு என்று அப்பங்கள்போன்று உப்பி விட்டன. அத்துடன் அற்பபுத்திக் கொடியோன் நில்லாமல், பிராமணனை கெட்டித் தள்ளித் தன் உறையினின்றும் வாளை உருவினான். கஷ்டம்! கஷ்டம்!! பிராமணன் பாடு வில விலத்துப்போய் விட்டது. அவன் தொண்டை உலர்ந்தது; மெய் நடுங்கிற்று; கண்கள் சுழன்றன;

அவன் தன் இரு கரங்களையும் சிரமேற் குவித்து, "போதும்! போதும்!! என் அப்பனே! என் ஐயனே, என்னால் நோவு பொறுக்க முடியவில்லை; தயவு செய்யுங்கள். என்னைக்* கொல்லவேண்டாம்! கொல்ல வேண்டாம்!! தங்கள் உத்தரவின்படியே நடந்து கொள்ளுகிறேன்" என்று மிகுதியும் வணங்கிக் கேட்டுக் கொண்டான். அற்பபுத்தியும் சிறிது சீற்றம் தணியப் பெற்று, வாளை உறையிற் பொருத்தி, அவனை விடுத்து, "இப்பொழுது என்ன சொல்லுகிறாய்? நாயே! அற்பப் பயலே! பிச்சைக்கார படுவா! நீயா எனக்குப் புத்தி சொல்லுகின்றவன்? மரியாதையுடன் சொன்னால் கேட்பாயா நீ? 'மயிலே! மயிலே!! இறகு கொடு' என்றால் கொடுக்குமா? அழுத்தமாக இழுத்துப் பிடுங்கினால் அன்றோ கொடுக்கும்? சீக்கிரம் சொல். என் மனத்தின்படி நடக்கப் போகின்றாயா? இல்லையா? இப்பொழுது என்ன சொல்லுகின்றனை?" என்று சிங்கம்போன்ற கர்ஜனையுடன் அதட்டி உருட்டிக் கேட்டான்.

அந்தணனோ, 'சிம்ம சொப்பனம் கண்ட யானை போன்று, மடங்கி, அடங்கி, நடுங்கி, ஒடுங்கிக்கொண்டு, "இளவரசே! உத்தரவுப்படி நடந்து கொள்ளச் சித்தமா யிருக்கிறேன்" என்று கை கால்கள் உதறல் எடுக்க, நா குழற, நெஞ்சம் பதை பதைக்கக் கூற லுற்றான்.

அதனைக்கேட்ட அற்பபுத்தி நெஞ்சினில் மகிழ்ச்சி எய்தி, அந்தணனை நோக்கி "நான் சொல்வதை நன்றாய்க் கவனி; கொஞ்சம் விஷயம் வெளியானாலும்



மிஞ்ச மாட்டாய் நீ. ஜாக்கிரதை; எங்குதான் நீ ஓடிப் போய் ஒளிந்தாலும் அங்கு வந்து உன்னைக் கண்டு பிடித்துக் கண்டங் கண்டமாய் வெட்டி எறிந்து விடுவேன். உஷார்! பத்திரம்!! ஞாபகம் இருக்கட்டும். அவ்வாறின்றி இரகசியமாய் நீ காரியத்தைச் செய்து முடிப்பாயே யானால், உனக்குப் பொன்னும், மணியும், மாளிகையும், நிலங்களும் வேண்டுவன நல்கி, உன்னை யுயரிய நிலையில் வைத்துப் போற்றி வருவேன். தெரிந்ததா சங்கதி? இப்பொழுது எது கஷ்டம்? எது இஷ்டம் என்று சொல்" என்றான். பிராமணன் வேறு வழியின்றிச் "சரி" என்று சம்மதித்தான். அப்பால் அற்பபுத்தி அந்தணனை நோக்கி, "நீ உடம்பு சரியில்லை யென்று நான்கு நாட்களுக்கு வாராமல் உன் மகனை அனுப்பி வை. அதற்குள் உன் கன்னங்களின் வீக்கமும் வாங்கி விடும். தேக நிலையும் சரியான ஸ்திதிக்கு வந்து சேரும். நீ வேலைக்குச் சென்ற மூன்றாம் நாள் உனக்கிட்ட பணியை முட்டின்றிச் செய்து முடிக்க வேண்டும். உனது செயலை ஒவ்வொரு விநாடியும் யான் கவனித்துக் கொண்டிருப்பேன் என்பதை மனத்தில் வை. நான் சொல்லுவது விளங்குகின்றதா? எச்சரிக்கையாய் நடந்துகொள். நான் கூறியபடி செய்து முடித்தால் நீ உயர் நிலை அடைவாய் என்பதையும், இல்லையேல் உன் கதி அதோ கதி தான் என்பதையும் மற்றொரு முறை உனக்கு ஞாபகம் மூட்டுகின்றேன். பத்திரம்! பத்திரம்!! பத்திரம்!!!" என்று கூறி எச்சரித்துவிட்டு அவ்விடத்தினின்றும் அகன்று சென்றான்.

அடியுண்ட அர்ச்சகப் பிராமணன், தன் விதியை நொந்து வருந்தி, "என்ன! என்றுமில்லாத படிக்கு இன்று இப்படி வந்து சம்பவித்தது. நீதியை எடுத்துச் சொல்லப் போக, நெடிய ப்ரகரங்கள் கிடைக்கப் பெற்றேன். சீ! சீ!! நான் ஒரு பெரிய மூடன்!!!

வானர மழைதனில் நனையத் தூக்கணம்
தானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடில் இடரா தாகுமே. (விவேகசிந்தாமணி)

வானரத்திற்குப் புத்தி போதித்த தூக்கணத்தின் கதி யாதாயிற்று? கூடிழந்து கெட்டதன்றோ? ஈனருக்கு ஞானமும், கல்வியும், நவின்ற நூல்களும் உரைத்தால் இடரன்றோ சம்பவிக்கும்? இதைத் தெரிந்திருந்தும் அத் துஷ்டனுக்குப் புத்தி சொல்லப்போன என் மதியையன்றோ செருப்பிட்டுப் புடைத்தல் வேண்டும்? 'பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு' என்ற பழமொழி பொய்யாகுமா? இஃது என் விஷயத்திற் பலித்தது. நான் முதலிலேயே அவன் தன்மையைத் தெரிந்துகொண்டு அதன்படி நடந்திருக்க வேண்டும். சென்ற விஷயத்தைக் குறித்துச் சிந்தனை செய்வதில் யாது பயன்? இனி என் செய்வது? உரலில் தலையிட்டுக்கொண்டு உலக்கைக்குப் பயந்தால் முடியுமா? கொஞ்சம் நாம் பிசகுவதாய்த் தோன்றினாலும் அந்தச் சண்டாளன் தான் சொன்னபடியே நடத்தி முடிப்பான் என்பது நிச்சயம். ஐயோ! கொடியவனான அற்பபுத்தியின் ஏவற்படி நடந்து, தருமதேவதைக்குத் தீங்கு செய்யுமாறு பிரமன் என் தலையிலா



விதிக்கவேண்டும்? என்ன செய்வேன்? எவ்வாறு இப் பாபத்தினின்றும் உய்வேன்? தப்ப ஒரு வழியையும் காணோமே!" என்று தனக்குள் பலவிதமாய் ஆலோசித்த வண்ணம் சங்கடப்பட்டுக் குழம்பிக் கொண்டிருந்தான்.

நான்கு நாட்களும் கழிந்தன. ஐந்தாம் நாள் அணுகிற்று. அர்ச்சகப் பிராமணன் பழையபடி தன் வேலைக்குத் திரும்பி வந்து சேர்ந்தான். ஒவ்வொரு விநாடியும் இளவரசனான அற்பபுத்தி அவனை அதிக நுட்பமாகக் கவனித்துக்கொண்டு வந்தான். குறிப்பிட்ட நாழிகையும் குறுகிற்று. அர்ச்சகப் பிராமணன் அடைந்த விசனமும் வருத்தமும் செப்பத்தரமன்று. அவன் முகம் சவம்போல் வெளுத்தது. புத்தி தடுமாறியது. பித்தங் கொண்டவன் போலக் காணப்பட்டான். இளவரசுக் கொடியோனோ மறைவிடத்தில் இருந்து அவனைக் கவனித்தவாறிருந்தான். பிராமணன் பூசை முடித்ததும் அற்பபுத்தி மறைவிடத்திலிருந்தபடியே தான் வாங்கி வைத்திருந்த கொடிய விஷத்தைக் காகிதத்தில் வைத்துச் சுருட்டி எறிந்தான். பிராமணன் அதை எடுத்து அரசனுக்குக் கொடுக்க வேண்டிய தீர்த்தப் பிரசாதத்தில் கரைத்து விட்டு நெஞ்சம் பட படவென்று பறை அடித்த வண்ணமாய் இருக்க, அரசன் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான்.

இளவரசனான அற்பபுத்தியும் அண்ணன் மீது அன்பு ஒரு பக்கமும், ஆசை மற்றொரு பக்கமுமாக இழுக்க, இக்காரியம் எப்படி முடியுமோவென்று அச்

சம் மேலிட, மார்பு திக் திக்கென்று வெடித்து விடுவதேபோல் அடித்துக்கொள்ள, அறிவு சோர்ந்து, மறைவான ஒரு மூலையில் பிணம்போற் குந்தி இருந்தான்.

சத்திய சந்தனும், துஷ்டர்களாகிய சத்துருக்களுக்கு இடியேறு போன்றவனும் சற்குண மணியுமாகிய சாந்தசீலர் பெருமான், அன்றும் வழக்கம்போல் எழுந்து, தமது நியமப்படி காரியங்களை யெல்லாம் செவ்வையுறச் செய்து முடித்த பின்னர், ஸ்நானம் செய்து, தூய ஆடை புனைந்து, தேவனைத் தியானித்துத் திரிபுண்டரமாகத் திருநீறணிந்து, திருமுருகாற்றுப் படையைத் திறம்பட ஓதித் தம் பூசையை முடித்துக் கொண்டபின், ஆண்டவன் சந்நிதியை அடைந்து, சிரமிசை கூப்பிய கையராய், ஆனந்தத் தாண்டவமாடி உடம்பெல்லாம் மயிர் பொடிப்ப, நா தழு தழுக்க, அகம் நெகிழ்ந்து,

'அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரந்தோன்றில் வேல்தோன்றும்-நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகா என்றோதுவார் முன்.' (நக்கீரர்.)

எனக் கண்ணீர் ஆறாக ஓடத் தோத்தரித்துப் பல முறை விழுந்து தண்டனிட்டார். பின் எழுந்து நின்று தம் உணர்வற்றுக் கொஞ்ச நேரம் தியானச் சமாதியில் இருந்தார். அப்பால் சாந்தம் பொலிந்து, அருள் பெருகி வழியும் இன்முகத்தோடும் கூடின மந்தகாசம் தவழ, கிழக்கு நோக்கி உட்கார்ந்து தம் இடக் கரத்தின்மேல் வலக் கரத்தை வைத்துத் தீர்த்தப்



பிரசாதம் வாங்கிக் கொள்ளுமாறு, மிகுந்த பய பக்தி விசுவாசத்துடன் பகவானைத் தியானம் செய்தவாறே தம் அழகிய கைகளை நீட்டியதும், அர்ச்சகப் பிராமணன், உடல் கிடு கிடு வென நடுங்க, அவ் விடபானத்தை அப்பெருமான் கையில் ஊற்றினான். அரசர் அத்தீர்த்தத்தை அருந்துமுன் ஓர் நிமிடம் கண்மூடித் தியானத்திலிருந்தார்.

அதுகாலையில் பிராமணன் சிந்திப்பான் "என்ன அநியாயம்! என் உயிரையே பெரிதாகவெண்ணி இந்தத் தரும பூபதிக்குத் தீங்கிழைக்கத் துணிந்தேனே! இவர் உலக முழுவதற்கும் தந்தை போன்றவராயிற்றே! மன்னுயிரைத் தன்னுயிர்போல் பாதுகாக்கும் மன்னரன்றோ இவர்! நானோ புழுத்த நாயினும் கடையேன். தன்னலம் பாராட்டும் இழி தகையேன். புன் மதியினேன். தேகத்திற்குச் சிறிது வருத்தம் தந்த இரண்டு மூன்று அறைகளின் நிமித்தமும், மித்தையான செல்வத்தின் பொருட்டும், கேவலமான எனதுயிரின் பொருட்டும் இப்புண்ணிய புருஷருக்கா ஊறு செய்வது? மேலும் அவர் அன்னத்தைப் புசித்து அவருடைய ஆபத்துக்கு என்னுடைய ஆவியைக் கொடுத்துப் பாதுகாக்காமல், நானே அவருடைய கையில் விஷத்தை ஊற்றினேனே! அந்தோ! அந்தோ! கொடியரிலும் கொடியேன்! கல்வி கேள்விகளற்ற பாமரர்களுமன்றோ தம் எஜமானர்களைக் காப்பதன் நிமித்தம் தங்கள் உயிர்களையும் விட்டுவிட முந்துகின்றனர். கேவலம் நாயுமன்றோ தன் பிராணனைத் திரணமாக மதித்துத் தன்னை ஆதரிப்போனைப் பேண விரைகின்

றது. இவ்வாறெல்லா மிருக்க என் புன் மதி சென்றவாறென்னே!! என்னை உயிருடன் நெருப்பிலிட்டுப் பொசுக்கினாலும் இப்பாதகம் ஒழியாதே. சத்திய சீலரான சாந்தசீல மஹாராஜருக்கு நானே இப்படிச் சத்துருவாக வந்து முடிவேனா? எது எவ்வாறாயினும் சரி, தர்மப் பிரபுவுக்கு உண்மையை வெளியிட்டு அவரைத் தப்புவித்தே தீருவேன். இல்லையேல்,மீளா நரகுக்கன்றோ ஆளாக நேரிடும்? எஜமானத் துரோகமும், ராஜத் துரோகமு மன்றோ என்னைச் சூழும்? ஒரு விநாடி தாமதிப்பின் உண்டாகும் கேட்டிற்கோர் அளவுண்டோ?" என்றிவ்விதமாக எண்ணி அரசனைக் காக்கத் தீர்மானித்துக்கொண்டு துடி துடித்த மனத்தினனாய், அரசன் விழிகளைத் திறப்பதைக் கருத்துடன் எதிர்நோக்கி, விஷயத்தை வெளியிட உறுதி யுடையவனாக நின்றான்.

மன்னர்பிரான் கண்களைத் திறந்து தீர்த்தப் பிரசாதத்தை அருந்துமாறு கைகளைச் சிறிது மேலே உயர்த்தின வளவில், பிராமணன் நடு நடுங்கி, "அருந்த வேண்டாம்! என் ஆண்டவனே! அதைத் தயவுசெய்து அருந்தவேண்டாம்!! கீழே ஊற்றிவிடுங்கள்! கீழே ஊற்றிவிடுங்கள்!! என் அப்பனே! என் துரையே!! பிரபோ!! கீழே ஊற்றிவிடுங்கள். உண்மையைச் சொல்லி விடுகிறேன். பின் தங்கள் சித்தப்படி அடியேனை எவ்விதமேனும் தண்டியுங்கள்" என்று கூறிக் கொண்டு, கண்ணீர் பெருகித் தாரை தாரையாக ஓட, அடியற்ற நெடுமரம் போல் அவரடிகளில் வீழ்ந்து, எழுந்து வணங்கிக் கரம் கூப்பிச் சிரம் குனிந்து உடல் பதற நின்றான. அரசர் பெருமான் அச்செயலைக்



கண்டு சிறிது வியப் பெய்தியவராய், உயர்த்திய கரங்கள் உயர்த்திய வளவில் நிற்க, அந்தணனை நோக்கி, மேன்தன்மை வாய்ந்த புன்னகை தவழும் இன்ப முகத்துடன், "யாது விசேடம் உற்றது? கூறுக" என உரைத்தார். அதனைச் செவியுற்ற அந்தணன் பன்முறையும் வணங்கி நின்று, "பெருமானே! எனக்கு என்ன தீங்கு பின் நேருவதாயினும் சரியே. தங்களுக்கு உண்மையை உள்ளபடி சொல்லி விடுவதெனத் தீர்மானித்து விட்டேன். பேரருளாளராகிய தங்கட்குத்தீங்கு இழைத்துவிட்டுப் பெருநிலத்தில் வாழ நினைப்பேனா? அந்தோ! சண்டாளன்! கொடியன்!

(வரும்)

பண்டிதர் செ. ரா. கணபதிசுப்பிரமணிய அய்யர்.
தமிழாசிரியர், போர்டு ஹைஸ்கூல், கொள்ளேகாலம்.

## குழந்தையைக் கொன்ற மலடி
## பிள்ளைபெறக் கொலை செய்வதா?

லாகூர் ஹைகோர்ட்டில் சென்ற மாதம் 30-ந் தேதியன்று கொலை வழக்கொன்று விசாரிக்கப்பட்டது. அவ்வழக்கின் சாராம்சம் மிக விசித்திரமானது. ஒரு மாது விவாகம் செய்து கொண்டு ஒன்பது வருஷங்களாகியும் பிள்ளை பெறாமல் மலடியாக இருந்து வந்தாள். அவளுக்கு வயது 25. அவள் பிள்ளை பெறவேண்டுமென்று மிக ஆவலாக இருந்து அதற்காக யார் யார் எப்படிச் சொன்னாலும் அப்படியெல்லாம் செய்து பார்த்தாள். அவள் அனுஷ்டியாத விரதங்களோ, ஸ்நானம் செய்யாத தீர்த்தங்களோ இல்லை. இறுதியில் யாரோ ஒருவர் அவளிடம், அவள் ஒரு பெண் குழந்தையைக் காளிக்குப் பலியிட வேண்டுமென்று யோசனை கூறியபடியே, அவள் தன் வீட்டுக்கு விளையாடவந்த நான்கு வருஷப் பெண் குழந்தை யொன்றைக் கொலை செய்துவிட்டாள். அவ்வழக்கில் செஷன்ஸ் நீதிபதி அவளுக்கு மரண தண்டனை விதித்தார். ஆனால் அப்பீலில் ஹைகோர்ட் நீதிபதிகள் அதைத் தீவாந்தர சிக்ஷையாக மாற்றி விட்டனர்.

# உழவைவிடச் சிறந்த தொழில் இல்லை.

மங்களபுரியில் இரண்டு சகோதரர்கள் இருந்தனர். மூத்தவன் பெயர் கமலநாதன். இளையவன் பெயர் சந்திரசேகரன். இவர்கள் கல்வி கற்றவர்கள்; கைத்தொழில்களிலும் தேர்ந்தவர்கள். ஏழைகளா யிருந்தபடியால் இவர்களைக் கவனிப்பாரொருவரு மிலர். சுயமாக ஒரு தொழிலைப் புரியவும் கையில் கொஞ்சம் பொருள்கூட இல்லை. நல்ல அந்தஸ்திலுள்ள பெரிய மனுஷர் சிலரை அடுத்துத் தங்களுக் கேதேனும் பிழைக்கும் வழி காட்ட வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டும் பயன் படவில்லை. மானிகளாதலால் பிச்சை யெடுக்கவும் லச்சை கொண்டார்கள். "வெண்ணெ யிருக்க நெய்க் கழுவாரைப்போ லல்லவா" நமது நிலைமை யிருக்கிறது. எல்லாம் விதியின் பயன். யாது செய்யலாம்; போதுமான போஜனம் கிடைப்பது இந்த ஊரில் அரிதா யிருக்கிறபடியால் வெளியூருக் கெங்கேனும் போயாவது பார்ப்போம்" என்று நிச்சயித்தவர்களாய் அவ்வாறே செல்லத் துணிந்தார்கள்.

இவர்கள் மங்களபுரியைவிட்டு இன்ன ஊரை யடைவ தென்கிற முடிவில்லாமலே பல பல வழிகளைக் கடந்து போம்பொழுது, ஓரூரில் இரண்டு தினம் தங்கிப் போகலாம், சிரமம் கொஞ்சம் தணியும் என்று தங்கினார்கள். அவ்வூரின் பெயர் இரமணீயபுரம். இவர்



கள் தங்கியிருந்த இடத்தினருகே வயல் நிலங்கள் பல இருந்தன. உழவுத் தொழில் அவ்வூர்க் குடிமக்களால் நடத்தப்பட்டு வந்தது.

அது கண்ட இளையவன் மூத்தவனைப் பார்த்து, "அண்ணா! நானிவர்களிடம் போய் ஏதாவது வேலை கேட்கிறேன். கொடுக்கும் பட்சத்தில் அவர்களுடன் சேர்ந்து வேலை செய்து கூலி பெற்று வருகிறேன். அதனால் நாம் சுதந்தரமாகச் சிறிது காலம் பிழைத்து வரலாம். பிறகு தெய்வ சங்கற்பப்படி நடப்பது நடக்கட்டும். தங்கள் யோசனை எப்படியோ?" என்றான். அண்ணன் "அவ்வாறே செய்; நான் இங்கேயே யிருக்கிறேன். மாலையில் என்னிடம் வா" என்று விடையளித்தான்.

இளையவன் அங்கிருந்த குடியானவர்களைக் கண்டு வணங்கி, "ஐயன்மார்களே! நான் ஒரு பரதேசி; எங்கும் வேலை யகப்படாமல் கஷ்டப்படுகிறேன்; எனக்கு எவ்விதக் கைத்தொழிலும் செய்ய வல்லமையுண்டு. படிப்புந் தெரியும். ஏதாவது வேலை கொடுத்தால் உங்கள் மனங் கோணாதபடி செய்வேன். உங்களுக்குத் திருப்தியை புண்டாக்குவேன். நீங்கள் தரும் கூலியை அன்போடு பெற்று ஜீவித்து வருவேன்" என்று கூறினான்; உழவின் நுட்ப திட்டங்களையும் விரிவாய் எடுத்துச் சொன்னான்.

இம்மொழிகளைக் கேட்ட அவர்கள் அவனைத் தங்களூர் பெரிதனக்காரனிடம் அழைத்துச் சென்றார்கள். பெரிதனக்காரன் சந்திரசேகரனது வரலாற்றையும், அவனுக்குத் தெரிந்திருக்கும் உழவின் திறத்

தையும் விசாரித் தறிந்து, "இவன் யோக்கியனாகவே காணப்படுகிறான். நமது நன்செய் புன்செய் நிலங்களை இவனிடம் ஒப்புவித்து, காலத்துக்கேற்ற தானியங்களைத் தன்னிடமிருக்கும் ஆட்களைக்கொண்டு நடத்தி வரலாம்" என்று தீர்மானித்தவனாய் அவனை நோக்கி, "தம்பி! இந்த நிலங்களையும் ஆட்களையும் வைத்துக் கொண்டு எந்தெந்தக் காலத்தில் எதை எதைப் பயிரிடக்கூடுமோ அப்பயிர்களை விளைவித்து வா. என் வீட்டிலேயே சாப்பிடலாம். எனக்கு உன்னால் நன்மைகளுண்டானால் நான் உன்னைக் கைவிட மாட்டேன். உனக்கு விவாகமுஞ் செய்வித்து, வேண்டிய நிலமும் பொருளும் பரிசாக உதவி, தனி வீட்டில் குடி புகுத்தி, என்னைப்போல் நல்ல அந்தஸ்தில் நிலை நிறுத்துவேன்" என்றான்.

அதற்கு உடன்பட்ட சந்திரசேகரன் "இதுவும் தெய்வ சகாயமே" என வெண்ணி அன்று மாலை பரியந்தம் எஜமானனைச் சந்தோஷப்படுத்த வேலைசெய்து வந்தான்; பொழுது போனதும் தன் தமையனைக் காணலாம்" என்று நினைத்திருந்தான்.

அண்ணனான கமலநாதன் தம்பியின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு, தான் தங்கியிருந்த இடத்திலேயே காத்திருந்தான். அப்படியிருக்கும்போது, அவ்வூர் அரசன் இறந்துபோனான். அப்போது அமைச்சர் முதலானோர் ஒன்று கூடி, பட்டத்து யானையை நீராட்டி அலங்கரித்து, அதனிடம் பூமாலை யொன்று கொடுத்து, முன்னோர் செய்துவரும் வழக்கம்போல் அதை நகர்வலஞ் செய்துவர அனுப்பினார்கள். அது



எவர் கழுத்தில் பூமாலையைப் போட்டுத் தன் முதுகின்மேல் எடுத்துக்கொண்டு வருகிறதோ அவரையே இறந்துபோன அரசனுக்குப் பதில் அரசனாக நியமித்து விடுவார்கள். அவ்வாறே சென்ற யானை நமது கமலநாதனைத் தூக்கிக்கொண்டு வந்தது. அவனே அவ்வூருக்கு அரசனானான். அதனால் அவன் தன் தம்பியை உடனே வந்து பார்க்க முடியாதவனாயிருந்தான்; தம்பி நம் ஊரில் தானே உழவுத் தொழில் செய்து கொண்டிருக்கிறான். சமயம் நேர்ந்தபோது கவனிக்கலாம் என்பது கமலநாதனுடைய எண்ணம்.

இப்படி அண்ணன் அரசனாகவும், தம்பி உழவாளியாகவும் இரமணீயபுரத்தில் இருந்து வந்தார்கள். ஒருவரை யொருவர் காண்பதற்கு அநுகூலப்படவில்லை. அண்ணன் அரசனாயிருப்பது தம்பிக்கும் பிரசித்தமாகத் தெரியவருமாதலால், தம்பியும் அவனை உடனே காணவேண்டிய ஆவசியகம் ஏற்படவில்லை. சில வருஷங்களுக்குள் சந்திரசேகரன் உழவாதிபதியாய், சொந்த வீடு வாசல், தோட்டம் துரவு, நிலபுலங்களுடையவனாய், அநேக ஆட்களை வைத்துக்கொண்டு சுக வாழ்வி லிருக்கலானான். கமலநாதனோ மற்றொரு அரசனால் தோல்வியுற்றுத் தன் செல்வங்கள் முற்றும் இழந்து, பரதேசியாய்த் தம்பியின் ஆதரவில் வந்து சேர்ந்தான். இதனால் உழவே மற்ற வேலைகளைப் பார்க்கிலும் மேலானதும், அழியாததும், சுதந்தரம் பெற்றதுமான வாழ்வென்று தெரிகின்றது. ஆதலால் "உழவர்க் கழகிங் குழுதாண் விரும்பல்" என்றனர் மேலோர்.

210783

1. "மேழிச் செல்வம் கோழைபடாது".
2. 'உழுதூண் விரும்பு'.
3. 'உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு'.
4. 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்'.
5. 'சீரைத்தேடின் ஏரைத்தேடு'.
6. 'உழவின்றேல் உலகில்லை'.

---

ஒரு நாள் ஒரு நதிக்கரையில் இரண்டு காட்டாள்கள் நின்று கொண்டிருந்தார்கள். நதியில் வெள்ளம் பிரவகித்துப் போய்க்கொண்டிருந்தது. அதிலகப்பட்ட கரடி யொன்று மேலுங் கீழுமாக உருண்டு போய்க்கொண்டிருந்தது. அதை ஏதோ கம்பளி மூட்டையென்றும், அதற்குள் ஏதாகிலும் நல்ல சாமான் இருக்கவேண்டு மென்றும் அவர்கள் எண்ணிய படியால், ஒருவன் உடனே குதித்து நீந்திப்போய் அதைப் பிடித்தான். தனக்குப் பற்றேதாகிலும் கிடையாதா வென்று கரடி தபசு பண்ணிக்கொண்டிருந்ததால், ஆள் அகப்பட்டதும் அவனைக் கெட்டியாக இறுக்கிப் பிடித்துக் கட்டிக்கொண்டது. உடனே அவன் அதைவிட்டு தப்பித்துக் கொள்ளப் பார்த்து முடியாமல், அதுவும் தானும், மேலுங்கீழுமாய்ப் போராடுவதைக் கரையிலிருப்பவன் கண்டு, 'தம்பீ, கம்பளி மூட்டை கிடக்கட்டும், நீ கரைவந்து சேர்' என, அவன், 'அண்ணா, கம்பளி மூட்டையை நான் விட்டுவிட்டேன் ஆனால், கம்பளிமூட்டை என்னை விடமாட்டேன். என்கிறது. என்ன செய்வேன்' என்று சொல்லி இறந்தானாம். நமது பாப மூட்டைகளும் இவ்வாறே யெனத் தெளிதல் வேண்டும்.

## போர்க்களத்தில் பின்வாங்காத வீரதீரம் உள்ளவனே தளகர்த்தனாவன்

திருமணவூரைப் பெருமையோ டாண்டு வந்த தருமபூபதியிடம் தளகர்த்த னொருவ னிருந்தான். அவனுடைய முகத்திலும் மார்பிலும் யுத்த களத்தில் பெற்ற புண்ணின் வடுக்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தமையால் அவனை "இவன் பகைவர் முன் தன் உயிர்க்கு அஞ்சாது நின்று போர்புரியும் வீரதீரன். எமனையும் எதிர்க்கக் கூடிய ஆற்றல் வாய்ந்தவன். பகைவரது சேனைகள் இவனைக் காணில் 'நாகத்தைக் கண்ட எலியினை'த்தை ஒத்து நிற்பர். இவன் ஒருவனே தனது இராஜாங்கத்தைப் பாதுகாக்கப் பட்டவன்" என்று புகழ்வார்கள்.

இத்தன்மையான தளகர்த்தன் திருமணவூரி லிருப்பதால் அரசனுக்கும் குடிகளுக்கும் இயல்பாய் ஏற்படக்கூடிய எத்தன்மையான பயமும் கிஞ்சித்தும் இல்லாமல் யாவரும் மகிழ்வோடு வாழ்ந்து வரலானார்கள். இவ்வூ ரரசன் பெரிய அரசனொருவனுக்குக் கப்பங் கட்டி வருவது நெடுநாளையப் பழக்கமாயிருந்து வந்தது. இப்போது அது தவணைப்படி கட்டி வர வேண்டுமென்கிற நிர்ப்பந்தமின்றி இஷ்டமானபோது கட்டப்பட்டு வந்தது. இதனை அப்பேரரசன் கவனியாதிருந்தான். ஒரு நாள் அவன் தனக்கு அரசிறை கட்டிவரும் சிற்றரசர்களின் கணக்குகளைத் தனிக்கை

செய்ய நேர்ந்தது. அப்போது, திருமணவூரரசன் ஒருவன் மட்டும் கெடுப்படி நடவாமல் தன் இஷ்டப் படி நடந்து வருகிறானென்பது வெளியாயிற்று. அதனால் அப்பேரரசனுக்கு மிகவும் கோபம் உண்டாகவே, அவன் தன் மந்திரி பிரதானிகளை நோக்கி, "என்ன இது! திருமணத்தான் நமது சொரூபத்தை அறியான்போல் தோன்றுகிறது. நாமவனுக்கு இட்டுள்ள தவணையின் பிரகாரம் தன் பகுதிப் பணத்தைச் செலுத்தி வராமல் தனக்கு மனம் வந்தபோது கட்டி வருகிறான். அவனுக்கு இம்மதிப்பற்ற தனம் ஏற்பட்டதை நாம் அறியவேண்டும். அவனைப் பார்த்துப் பிறரும் அப்படி நடவாவண்ணம் செய்தால் தான் மற்றவர் இன்னும் ஜாக்கிரதையா யிருப்பார்கள். அவனை ஒழித்துவிடுவதே நலம் என்று எண்ணுகிறேன். உடனே நமது சேனைகளைப் போருக்குச் சித்தப் படுத்துங்கள். 'கொட்டினாற்றானே தேள்; கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சி.' சீ! அவன் கெட்டான்! இனி அவன் அந்தப் பதவிக்கு யோக்கியமாக மாட்டான். சீக்கிரம் அவனுக்குத் தெரிவிக்காமலே நாம் புறப்பட்டுப்போய் அவனூரைச் சூழ்ந்துகொள்ள வேண்டும்" என்று கட்டளை யிட்டான்.

அவன் உத்தரவுப்படியே சேனைகள் சித்தமாய்ப் புறப்பட்டுத் திருமணவூரை முற்றுகை போட்டுக் கொண்டது. அப்போது திருமணவூர் வேந்தன் திகிலடைந்து "ஐயோ! நான் அதோகதிக் காளாய் விட்டேன்" என்று மனக் கலக்கம் அடைந்து பரதவித்தான். தளகர்த்தன் என்ன தைரியம் சொல்லியும் கேட்கவில்லை.



பிறகு இருதிறத்தாருக்கும் பெருஞ் சண்டை நேர்ந்தது. திருமணத்தரசனது சேனைகள் எதிர்நிற்கப் பயந்து ஓடி விட்டார்கள். அரசனும் அஞ்சி பதுங்கிக் கொண்டான். அத்தருணம் தளகர்த்தன் ஒருவனே அஞ்சாமல் நின்று பேரரசனுடைய சேனைகளைப் புறங்கொடுத் தோடும்படி யுத்தம் புரிந்து ஜெயமுற்றான்.

இந்தத் தளகர்த்தனுடைய பேராண்மையை நோக்கி அந்தப் பேரரசனும் களித்து, சமாதான உடன்படிக்கை யேற்படுத்திக் கொண்டு, தளகர்த்தனையும் திருமணவூ ரரசனையும் கௌரவப்படுத்தி, "இனி நீ அரசிறை கட்டவேண்டாம்" என்று திட்டம் செய்தான். இத்தகைய தளகர்த்தனல்லவோ அரசனுக் கவசியம். ஆதலால், "தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை"* என்பது பொருத்தமென அறியலானோம்.

* தந்திரி-சேனாதிபதி-தளகர்த்தன்; தறுகண்-அஞ்சாமை ஆண்மை-தைரியம்.

## ஆழமான சமுத்திரம்

சமுத்திரத்தில் 3000 அடி ஆழத்திற்குக் கீழே சூரிய வெளிச்சம் நுழைய முடியாது. அந்த ஆழத்திற்குக் கீழ் வசிக்கும் மீன்களுக்கு சூரிய வெளிச்சத்துக்குப் பதிலாக அவைகளின் அவயவங்களிலேயே ஒரு ஜோதி இருக்கிறது. இந்த ஜோதியும் சாதாரணமாய் இருட்டு நாளிற் சமுத்திரத்தில் தூரத்து அலைகளைக் கவனித்துப் பார்த்தால், அவைகளிலிருந்து பளிச்சுப் பளிச்சென்று புறப்படும் வெளிச்சமும் ஒன்றே. மேலே சொல்லிய ஆழத்தில், தண்ணீர் ஓட்டம் கிடையாது. அலை யடிப்பதில்லை; காற்றடிப்பதில்லை; சூரிய வெப்பமில்லாததால் தாவரவர்க்கம் ஒன்றும் இருக்கமுடியாது. நிலமட்டத்திலுள்ள காற்றும் ஒவ்வொரு சதுர அங்குலத்தையும் 15-ராத்தல் பாரத்தோடு தாக்குகிறது. சமுத்திரத்தில் 15,300 அடிக்குக் கீழே போய்விட்டால் அங்கே ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் 11-கால் ராத்தல் பாரம் வைத்தாற் போலிருக்கும். ஆழத்திலுள்ள ஜலம் மிகவும் குளிர்ச்சியாயிருக்கும்.

# ஆடையாபரணம்

(மாயக்கூத்தன் எழுதியது)

முன்காலத்துப் பெண்மணிகள் எவ்வித நகைகளை அணிந்தனர் என்று இக்காலத்திலுள்ள நாம் அறிய விரும்புதல் இயல்பு. சீதாபிராட்டி என்னென்ன நகைகள் அணிந்து கொண்டாள் என்பதை அறிய விரும்பி நாம் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்திலே பார்ப்போம். சூடாமணி என்ற அணியொன்றைத் தலையிலே அணிந்திருந்தாள். இராவணன் தன்னைத் அபகரித்துச் செல்லும்போது சில ஆபரணங்களைக் கழற்றி, அங்கோர் குன்றிடையிருந்த குரங்குகளின் இடையிலே எறிந்தபோதும் இந்தச் சூடாமணியை மட்டும் கழற்றவில்லை. சீதாபிராட்டிமேலணிந்திருந்த உத்தரீயத்தையும் அவள் அதிலே முடித்து எறிந்த ஆபரணங்களையும் சுக்ரீவன் "இதோ பாரும்" என்று இராமபிரானிடம் அளித்ததை இவ்வாறு வருணிக்கின்றார் வால்மீகி முனிவர்.

"அந்த ஆடையையும் ஆபரணங்களையும் இராமபிரான் கையிலே எடுத்து நோக்கவே, அவருடைய முகத்திலே கண்ணீர் அருவியாய் வந்தது. பனிநீரால் சந்திரபிம்பம் மறைக்கப் படுவதுபோல் இராமரின் முகம் தோன்றிற்று. அவர் பிராட்டியிடமிருந்த அன்பின் மேலீட்டாலே தைரிய மிழந்து "என் அன்பே! ஓ!" என்று கதறிக் கொண்டு கீழே பூமியிலே விழுந்



தார். பின்பு அவ்வழகிய ஆபரணங்களைத் தமது மார்பிலே வைத்துக்கொண்டு கருநாகம் சீறுவதுபோல் சீறினார். பக்கத்திலே நின்று கொண்டிருந்த இலக்குவனை நோக்கி "இலக்குவ! அரக்கன் அபகரித்துச் செல்லும்போது சீதை என் பொருட்டு விடுத்த உத்தரீயத்தையும் அணிகளையும் பார். அவள் இவற்றைப் புதரிலே எறிந்ததாலே சற்றும் கேடுறாமல் இருக்கின்றன" என்றார். அப்போது இலக்குவன் "என் ஐயனே, நான் எப்போதும் அவர்களுடைய திருப்பாதங்களிலே நமஸ்கரித்ததாலே நூபுரங்களை நன்கறிவேன். அவர்கள் காதுகளிலும் கைகளிலும் அணிந்திருந்த குண்டலங்களையோ கேயூரங்களையோ அறியேன்" என்று பதிலளித்தார்.

எனவே, சீதா பிராட்டி குண்டலங்கள், கேயூரங்கள், சூடாமணி இவற்றை அணிந்திருந்தாள் என்பது வால்மீகி ராமாயணத்தாலே விளங்குகின்றது.

கம்ப ராமாயணத்திலே சீதாபிராட்டியின் மணக்கோலத்தை வருணிக்குமிடத்திலே,

"அவருடைய கூந்தற்பாரத்திலே விண்ணில மதியென விளங்கும் சிகழிகைக் கோதையைச் சூட்டினார்கள். அவருடைய தாதியர் வளைந்த நாவின் வடிவினதாகிய அளக பந்தி பூட்டிய பூட்டு மிட்டார்; காதுகளிலே ஊசலாடும் குழைகளை இட்டார்; இசைந்த கண்டாபரணங்களை அணிதல்செய்தார்; நிலாத்தவழ்ந்தாற்போல் முத்தாஹாரத்தைத் தவழவிட்டார்; கைகளுக்குக் கடகங்களிட்டார். மேகலையைத் தாழவிட்டுத் தாரகைச் சும்மை பூட்டினார்; பாத கமலங்களிலே

சிலம்பணிந்தார். நூபுர மிட்டார்; கண் களுக்கு மை யிட்டு நெற்றியிலே திலகமிட்டுப் பற்பொடி யப்பிக் காம்பு மிட்டார். இவ்வாறெல்லாம் அமிர்தினைச் சுவை செய்தென்ன அழகினுக்கு அழகு செய்தார்.''

இவ்வாறு சீதை அணிந்திருந்த அணிகளைப் புன் தொழில் அரக்கன் கொண்டு போந்த நாள் தூசிற் பொதிந்து குன்றில் குரங்குகளின் மருங்கிலே யிட்ட குறிப்பினாலேயே இராமபிரான் அநுமனை வேறு கொண்டு இருந்து கூறி "தென்திசை சேர்வாய்" என்று தூது விடுத்தார் என்று கம்பர் சுந்தர காண் டத்திலே பாடியுள்ளார். இவ்வாறு தேவியின் கடாக்ஷத் தாலே பேறு பெற்ற குரங்குகளை, உவமையாக அமை த்து ஓர் அரசனின் வண்மையாலே அணிகள் பல பெற்ற புலவர் ஒருவர் பாடுகின்றார். "அரச! நின்

"எஞ்சா மரபின் வஞ்சி பாட
எமக்கென வகுத்த அல்ல மிகப்பல
மேம்பாடு சிறப்பின் அருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந்தோனே! அதுகண்டு
இலம்பாடு உழந்த என் இரும்பேர் ஒக்கல்
விரற்செறி மரபின செவித் தொடக்கு நருஞ்
செவித்தொடர் மரபின விரற்செறிக்கு நரும்
அரைக்கு அமைமரபின மிடற்றி யாக்குநரும்
மிடற்று அமைமரபின அரைக்கி யாக்குநரும்
கடுந்தேரி ராமனுடன் புணர்சீதையை
வலித்தகை யரக்கன் வௌவிய ஞான்றை
நிலஞ்சேர் மதர் அணிகண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந்தா அங்கு
அறாஅவருநகை யினிது பெற்றிடுமே."

என்று,



"அரசனே! உன்னுடைய வஞ்சித்திறத்தினை யான் பாட நீ பல அணிக்குவைகளை அளித்தாய்; அணிகளையே முன்பு கண்டறியாத என் சுற்றத்தார் அனைவரும் நீ அளித்தவற்றைத் தாம் அணிந்து கொள்ளத் தொடங்கியது இராவணன் இராமனிட மிருந்து சீதா பிராட்டியைப் பிரித்துச் செல்லும் போது பிராட்டி குரங்குகளிடையிலே இட்ட அணி கலன்களை இவை எவ்வாறு அணியப்படுவன என் றறியாத குரங்குகளின் சேஷ்டைகளைப் போன்றிருந் தது; விரலணிகளைச் செவிகளிலே பூட்டிப்பார்த் தனர்; செவியணிகளை விரல்களிலே அமைக்க முயன் றனர்: அரை வடங்களைக் கழுத்துகளிலே அணிந்தனர்; கழுத்தணிகளை அரைவடங்களாக அணியமுயன்ற னர். இவ்வாறு ஹாஸ்யமான செய்கைகளைச் செய்த னர் என்பது இப்பாடலின் பொருள்.

இதினின்றும் சீதாப்பிராட்டி குன்றிடை நீத்த அணிகளுள் செவியணி குண்டலங்களும் விரலணி மோதிரங்களும் மேகலை முதலிய அரைவடங்களும் முத்தாஹார முதலிய கழுத்தணிகளும் இருந்தன என் றும் நாம் கொள்ளக் கூடுமன்றோ?

---

ஒருவன் தனக்குள்ள சாமர்த்தியத்திலும் சக்தி யிலும் குறைவான அபிப்பிராயம் வைத்திருக்கிற வரை யில் உத்தரவாதமும் நம்பிக்கையு முள்ள ஒரு நிலையை அடைய முடியாது.

# ஜால சம்பத்து

ஒரு காலத்தில் பிரம்மதத்தன் வாரணாசியில் ராஜ்யபாரம் நடத்தி வருகையில், அந்நகரின்கண் நான்கு பிராமண சகோதரர்கள் இருந்தார்கள். அவர்கள் சிறு வயதிலேயே சகல கலைகளையுங் கற்றுப் பின்னர் உலகத்தைத் துறந்த சந்நியாசிகளானார்கள். அவர்கள் பூமிப் பிரதட்சணம் செய்து, புண்ணிய நதிகளில் ஸ்நானஞ் செய்து, பிறகு இமயமலைச் சாரலில் நான்கு பர்ணசாலைகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தனர். சில நாள் கழிந்த பிறகு, அந் நால்வரில் மூத்தவன் அகால மரணமடைந்து, தான் செய்த தவப்பயனால் குபேரனாகப் பிறந்தான். குபேரன் தன் முற்பிறப்பை அறிந்து, தம்பிமார்கள் மீதுள்ள அன்பால் இமயகிரிக்கு வந்து, அவர்களை அடிக்கடி கண்டு யோக க்ஷேமங்களை விசாரித்து வந்தான். அவன் வரும் பொழுதெல்லாம் தம்பிமார் மூவரையுங் கண்டு "ஐயா! தங்களுக்கு என்ன தேவை, கூறுங்கள்" என்று கேட்பான். ஒருநாள், தம்பிமார் மூவர்களில் மூத்தவனிடம் வந்து, ஓர் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு "சுவாமி! தங்களுக்கு என்ன தேவை" என்று குபேரன் கேட்டான். மஞ்சள் காமாலை நோயால் வருந்திவந்த அவன், "ஐயா! எனக்கு அக்கினி வேண்டும்" என்றான். உடனே அக் குபேரன் ஓர் இரும்புக் கோடரியைக் கொடுத்தான். அச் சந்நியாசி குபேர



னைப் பார்த்து "ஐயா! எனக்கு விறகு யார் கொண்டு வந்து கொடுப்பார்கள்?" என்றான். குபேரன் "சந்நியாசியே, இந்தக் கோடரியைப் பிடித்துக்கொண்டு, உமது கையால் தட்டி 'விறகு கொண்டு வந்து அக்கினியை மூட்டு' என்று கூறினால், உடனே அக் கோடரி விறகு கொண்டுவந்து அக்கினியை மூட்டிக் கொடுக்கும்" என்றான். குபேரன் முதற் சந்நியாசிக்குக் கோடரி கொடுத்த பிறகு, இரண்டாவது சந்நியாசியிடம் வந்து, முதற் சந்நியாசியைக் கேட்டது போலவே, "தங்களுக்கு என்ன தேவை" என்று கேட்டான். அதற்கு இரண்டாவது சந்நியாசி "ஐயா பர்ணசாலைக்குப் பக்கத்தில் பாதை ஒன்று இருக்கிறது. அதன் வழியாக யானைகள் வந்து தொல்லை செய்கின்றன. அவைகளை ஓட்டவேண்டும்" என்றான். அதற்குக் குபேரன், மத்தளம் ஒன்றைக் கொடுத்து "ஐயா, சந்நியாசியாரே! மத்தளத்தில் வலக் கைப் பக்கமாக அடித்தால், பகைவர்கள் பயந்து ஓட்டம் பிடிப்பார்கள். இடக்கைப் பக்கமாக அடித்தால் பகைவர்களும் நல்ல மித்திரர்களாகிச் சதுரங்க சேனையுடன் உதவிசெய்ய வருவார்கள்" என்று கூறி விடைபெற்று, மூன்றாவது சந்நியாசியிடஞ் சென்றான். குபேரன் அங்குச் சென்றதும், சந்நியாசியைப் பார்த்து "ஐயா! தங்களுக்கு என்ன தேவை" என்று கேட்டான். அந்தச் சந்நியாசி, "ஐயா! எனக்குத் தயிர் வேண்டும்" என்றான். உடனே குபேரன், பாற்கிண்ணம் ஒன்றைக் கொடுத்து, "சந்நியாசியாரே! உங்களுக்கு ஏதாவது தேவையானால், இக் கிண்ணத்தைக் கவிழுங்கள். தேவையான பொருள்

வரும்; பிரவாகம்போல் தயிர் உண்டாகும். இதனால் ஒரு அரசையும் சம்பாதித்துக் கொள்ளலாம்" என்று கூறிவிட்டு, அக்குபேரன் தன் இருப்பிடஞ் சென்றான். அம்மூன்று சந்நியாசிகளும் தங்களுக்குக் கிடைத்த விசித்திரமான வஸ்துக்களைக் கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார்கள்.

இவ்வாறிருக்கையில், அம்மலைச் சாரலின் ஒரு புறத்தில் ஒரு காட்டுப் பன்றி மாயா சக்தி கொண்ட மாணிக்கக் கல் ஒன்றைக் கண்டது. அக்கல்லை வாயில் கவ்விக் கொண்டதும், அது பூமியை விட்டு ஆகாயத்திற் கிளம்பிற்று. ஆகாயத்தில் கிளம்பின அப்பன்றி, நடுச் சமுத்திரத்தில் ஒரு தீவு இருப்பதைக் கண்டு அங்கு இறங்கிச் சென்றது. அந்தத் தீவில் ஒரு நாவல் மரத்தின் கீழ் மாணிக்கக் கல்லை எதிரே வைத்து விட்டு நித்திரை போயிற்று. இப்படியிருக்க, ஒரு வாலிபன் பெரிய துஷ்டனாயிருப்பதைக் கண்ட அவன் தாய் தகப்பன், அந்த வாலிபனை அடித்து வீட்டைவிட்டுத் துரத்திவிட்டார்கள். அவன் அங்குமிங்கும் சென்று, கடைசியாக ஒரு கடற்கரைப் பட்டணத்திற்கு வந்து சேர்ந்தான். அங்கு கடலில் கப்பல்கள் போவதையும் வருவதையும் அப் பட்டணத்துத் துறைமுகத்தில் கப்பல்கள் வந்து தங்குவதையும் அவன் கண்டான். ஒருநாள் ஒரு கப்பலோட்டியைச் சிநேகம் பிடித்து, அவனுடைய கப்பலில் ஏறிச் சென்றான். நடுச் சமுத்திரத்தில் கப்பல் கரை தட்டி மூழ்கிப் போய்விட்டது. (வரும்)

'லோகோபகாரி.'

## ஆகார நியமம்

நாம் ஒவ்வொரு நாளும் அரை வயிறு ஆகாரம், கால் வயிறு ஜலம், கால் வயிறு தாராளமாகச் சுவாசம் வாங்கவுமாக, ஒவ்வொரு வேளையிலும் ஆகாரம் கொள்ளவேண்டும். ஒவ்வொரு வேளையிலும் என்றால் நினைத்த போதெல்லாம் சாப்பிடுவ தென்பதல்ல. "ஒரு வேளை யோகி, இரு வேளை போகி, மூன்று வேளை ரோகி" என்று முதுமொழி வழங்குவதுண்டு.

ஆகையினால் அரியதோர் யோக நிலையை அடைய விரும்புவோர் ஒரு வேளையே புசிக்க வேண்டும். நோய் நொடி ஒன்றுமில்லாமல் போக போக்கியங்களை அநுபவித்து கிருகஸ்த தர்மத்தைச் செவ்வனே நடத்தித் தன்னைத் தனக்கும் பிறருக்கும் உபயோகப்படுத்திக்கொள்ள விரும்புவோர் இருவேளை சாப்பிட வேண்டும். ஆகாரத்திலேயே ஞாபகமாயிருந்து ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிடுபவர் தம் சரீரத்தை நோய் என்னும் பிசாசுக்கு இருப்பிட மாக்குகிறார். அவர் அப்பிசாசால் அலைக்கப்பட்டுத் தன் வசமற்றுத் தனக்கும் பிறருக்கும் தன்னைப் பெரும் பாரமாக்கிக் கொள்கின்றனர். ஆதலால் இருவேளைக்கு மேல் சாப்பிடுவது மதியீனமாம்.

சிற்றுண்டிகளையும் அடிக்கடி தின்பது கூடாது. அப்படித் தின்பதினால் தீவிரமான பசி ஏற்படாது.

"பசியா முன் புசியேல்" என்று அமுதமொழி யுண்டு. ஆகையினால் நன்றாகப் பசியெடுத்த பின்பே புசிக்க வேண்டும். பசியெடுக்குமுன் புசித்தால் ஜீரணமாகாது. ஜீரணமாகுமுன் ஆகாரத்தை மேன்மேலும் போட்டுக்கொண்டே வந்தால் ஜீரணக் கருவிகள் கெட்டுப் போவதுமல்லாமல், பசி மந்தம், புளியேப்பம், முதலியன ஏற்பட்டுப் பிறகு வயிற்றுப்போக்கும் உண்டாகும். நாளடைவில் இரத்தங் கெட்டு பலக்குறைவும் உண்டாகி நடைப் பிணமாய்த் திரியும்படியான நிலைமைக்கு வர நேரிடும்.

ஆகார நியமத்தைப்பற்றி வில்லியம் காபெட் (William Cobbett) என்னும் ஆங்கில அநுபவி "பசியைத் தணிக்க இயற்கையாக எவ்வளவு ஆகாரம் வேண்டுமோ அவ்வளவே கொள்ள வேண்டும். விலை பெற்ற ஆகாரத்தில் சதா ஆசைகொள்வது கூடாது. அப்படி ஆசை கொள்வதால், புத்தி அதன் வழியே சென்று செய்யவேண்டிய வேலைகள் கெடும். செயிண்டு கிரேகரி (St. Gregory) என்னும் ஆங்கிலப் பாதிரியார் "ஆகாரத்தினுடைய அளவும் விசேஷமும் கண்டிக்கப் படவில்லை. ஆனால் விசேஷமான ஆகாரத்தை அளவுக்கு மிஞ்சிக் கொள்ளவேண்டுமென்கிற அவா கண்டிக்கப்படுகிறது' என்கிறார். இவ்வித ஆசை கொள்வதால், தன் நாவின் ருசியைத் திருப்தி செய்ய, தன் பசி தணிய ஆகாரம் கொள்ள எவ்வளவு நேரம் வேண்டுமோ, அவ்வளவு நேரத்திற்கு அதிகமான நேரம் வேண்டியிருக்கிறது. வேலை செய்ய வேண்டிய நேரத்தை இப்படி உண்டு களிப்பதில் செலவிடும்



ஜனங்களைப் பார்ப்பது மிகவும் சங்கடமான காரியம். அதிலும் ஒருவனுக்குச் சிறு வயதிலேயே இப்பழக்கம் ஏற்பட்டு விட்டால், அவனை நடைப்பிணமாகக் கொள்ளவேண்டும். அவன் ஒரு வேலைக்கும் உரியவனாக மாட்டான்.

ஒவ்வொருவரும் சரீர சுகத்தை எல்லாவற்றினும் மேலானதாகக் கொள்ளவேண்டும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்". சரீர சுகத்திற்கு நித்திரை இன்றியமையாதது. நாம் உட்கொள்ளும ஆகாரம் அன்றாடம் ஜீரணமானால் தான் சரியானபடி நித்திரை வரும் நல்ல நித்திரைக்குப் பிறகே விடியற்காலம் எழுந்திருந்து வேலையைக் கவனிக்க சாத்தியமாகும்; (He that dieteth himself prolongeth his life) "யார் ஒருவன் ஆகார நியமத்தைக் கையாண்டு வருகிறானோ அவன் நீடூழி வாழ்கிறான்."

"நான் ஒரு நாளைக்குச் சாப்பாட்டிற்காக 35 நிமிஷங்களுக்கு மேல் செலவிடுவதில்லை. நல்ல சுத்தமான ஆகாரமே போதுமானது. எப்போதாவது சாப்பிடும் நேரத்தில சரியானபடி பசியெடுக்கா விட்டால் நான் சாப்பிடுவதில்லை. நன்றாகப் பசி யெடுக்கும்படி விட்டுவிட்டுப் பிறகே புசிப்பேன். வயிறு முண்ட முண்டச் சாப்பிடுகிறவன் மிருகத்திற்குச் சமானமானவன்" என்று வில்லியம் கார்பேட் சொல்லுகிறார்.

மற்றும் சமீபத்தில் தம்முடைய 87-வது வயதில் காலஞ்சென்ற ஒரு பெரியார் தம் புத்திரர்களுக்குச் சொன்ன புத்திமதி இங்கு குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகும்.

"நான் என்னுடைய ஆகார நியமத்தினாலேயே சரியான காலத்தில் சுகமாக நித்திரை செய்து, அதிகாலையில் எழுந்து, அன்றாடம் செய்யவேண்டிய வேலைகளைச் செய்து மனச் சாந்தி யடைந்து வந்தேன். அதனாலேயே நான் இந்த வயதில் காது செவிடு படாமலும், கண் ஒளி மழுங்காமலும், அவயவங்கள் தளராமலும், புத்தி தடுமாறாமலும், என் வேலையை நானே செய்து கொள்ளும் வன்மையுடையவனா யிருந்து, இப்போதும் அதிக நாள் படுத்த படுக்கையில் இராமல், திடபுத்தியுடன் மரணத்தை எதிர்பார்த்தவனா யிருக்கிறேன். இவ்வானந்தத்திற்கு என்னுடைய ஆகார நியமத்தையும் ஒழுக்கத்தையும் தவிர வேறு காரணம் ஒன்றுமில்லை. நீங்களும் இவ்விரண்டையும் கடைப்பிடித்து ஒழுகுவீர்களானால், உலகத்தில் அரிய பெரிய காரியங்களைச் சாதித்து ஈசுவர கிருபைக்கும் பாத்திரவான்களாவீர்கள்."

என்னே ஆச்சரிய மிது! 17-வது நூற்றாண்டில் 1762-வது வருஷத்தில் பிறந்த **வில்லியம் காபெட்** என்னும் மேனாட்டு அநுபவி உலக க்ஷேமத்தின் பொருட்டுத் தம்முடைய **"சிறியாருக்குப் புத்திமதி"** என்னும் புத்தகத்தில் ஆகார நியமத்தைப் பற்றித் தம்முடைய அநுபவத்தை எழுதியிருப்பதும், மேலே குறிப்பிட்டுள்ள பெரியாரின் சுய அநுபவ புத்திமதியும் ஒன்றாக இருப்பது காண மனம் பூரிக்கின்றது. இதைக் கண்ணுறும் ஒவ்வொரு சிறுவரும் இம்முறையைக் கையாண்டு சுகவாழ்வை யடைவார்களாக.

*A. Gopalaratnam Ayyar, Madras.*

## ஓதுவ தொழியேல்

மேல் நாட்டில் ஜேம்ஸ் ஆலன் என்னும் பெயர் கொண்ட ஒரு கல்வி மானிருந்தார். அவருக்குச் சிறு வயது முதல் கல்வி பயில்வதில் ஆவல் அதிகமா யிருந்தபடியால், அவர் சதாகாலமும் புத்தகமும் கையுமாகவே இருந்து வந்தார். அவருடைய தந்தை அது கண்டு ஆலனிடம் சந்தோஷங்கொண்டு, அவர் கல்வி பயில்வதற்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் செய்து கொடுத்தார்.

ஆலனுடைய தந்தை திடீரென்று இறந்துபோனார். பிறகு பணம் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஆலனுக் கேற்றபட்டபடியால், அவர் ஒரு மில்லில் வேலைக் கமர்ந்தார். அந்த மில்லில் அவர் ஒரு நாளில் ஒன்பது மணி நேரம் கடுமையாய் வேலைசெய்ய வேண்டியதாயிற்று.

இப்படி காலமெல்லாம் மில் வேலையிற் கடத்தும்படி நேரிட்டபோதும் ஆலன் படிப்பை நிறுத்தாமல் நாடோறும் மூன்று மணி நேரமாவது படித்து வருவார். எல்லோரும் அவரைப் பார்த்து "இப்படி யுழைத்தால் நீ சீக்கிரம் இறந்து போவாய்" என்று கூறுவதுண்டு. ஆலன், "ஆகா! தூங்குகிற நரிக்கு இரை அகப்படுமோ? பாடு படாமற் பணம் வருமா? பெருமை வருமா?" என்று கூறுவார்.

இப்படியிருக்கையில் அவருக்கு ஓர் ஆபீஸில் செக்ரடரி (Secretary) வேலை கிடைத்தது. அது பொறுப்பான ஒரு பெரிய வேலை. அவ்வேலையில அவருக்கு நாளெல்லாம் வேலையிருக்கும். அந்த வேலைகளை யெல்லாம் ஆலன் பொறுமையுடன் செய்து முடித்து வீட்டுக்கு வந்து உணவுண்டதும் தனியிடத்தி லிருந்து நூல்களை ஓதுவார்.

ஆகவே, அவர் இடைவிடாமல் நூல்களை ஓதி வந்தார் பின்னர் அவர் சிறந்த வித்வானானார். அப்பால் நூல்கள் எழுதத் தொடங்கி உலகம் புகழத்தக்க அரிய நூல்களெழுதி வெளியிட்டார். அவருடைய அந்நூல்களை நம் தேசத்தார் யாவரும் கொண்டாடுவது மல்லாமல், சமயம் வந்த போதெல்லாம் ஆலன் கல்வி பயின்ற அழகை யெடுத்துப் பேசி மகிழ்கின்றனர்.

1. ஓதுவ தொழியேல்.* 2. இளமையிற் கல்.†

3. நூற்பல கல்.‡

---

* ஓதுவது - படிக்கும் தொழிலை விட்டு, ஒழியேல்-நீ நீங்காதே.

† இளமை-இளமைப்பருவத்திலேயே, கல்-நீ நூல்களைக் கற்றுக் [கொள்.

‡ நூற்பல - அறிவை விளக்கும் நூல்கள் பலவற்றையும் கல் - நீ [கற்றுக்கொள்.

(சோமாஸ்கந்தன்)

---

ஒருவனுடைய மனோபாவம் எப்படி யிருக்கிறதோ அப்படியே அவனுடைய வாழ்நாளில் நன்மை தீமைகளும் அமைகின்றன. "மனம்போல வாழ்வு"

## அதிக ஆசை அதிக நஷ்டம்

(முன் 34-ம் பக்கத் தொடர்ச்சி)

முத்தையன்:- "அடி கழுதை முண்டே! கத்தாதே. இதற்குப் பட்ட பிரயாசை யெல்லாம் வீணாகப் போய் விடும்" என்று அவளை அடக்கினான்.

பட்டாசாலையில் ஒரு மூலையில் தண்ணீர்ச் சாலுக்கடியில் தரை கெட்டியாயிருந்தது. அதற்கடியில் புதையலைப் புதைத்து பந்தோபஸ்து செய்தால் ஒருவரும் சந்தேகம் கொள்ளமாட்டார்கள் என்று நினைத்து, அங்குப் பள்ளந் தோண்டி, அந்த இடத்தில் புதையலை வைத்து, மணலைப் போட்டு மூடி, முன் போலவே தண்ணீர்ச் சாலை எடுத்து அதன்மேல் வைத்தான். விளக்கைப் பெரியதாய்த் தூண்டி அந்த இடத்தை உற்று நோக்கினான்; பழைய மாதிரியாகவே இருக்கக் கண்டு பேருவகை கொண்டான். "காளிகம்பளத்தாயி! கருப்பண்ணா! மதுரை வீரப்பா! உங்களை மறவேன்" என்று ஆநந்தக் கூத்தாடினான்.

குமரேசன் பரம யோக்கியன். 'வெளுத்த தெல்லாம் பால், கறுத்த தெல்லாம் தண்ணீர்' என்று சொல்லும் சுபாவமுடையவன்; தெய்வ நம்பிக்கையுள்ளவன். அவன் முத்தையன் வரவை எதிர்பார்த்த வனாயிருந்தான்.

குமரேசன் மனைவி:- "என்ன உங்கள் கூட்டாளி இன்னும் வரவில்லையே? நாழிகையாய் விட்

டதே. வேறு யாராவது புதையலை எடுத்துக்கொண்டு போய்விட்டால் என்ன செய்வது? நீங்களாவது போய் எடுத்துக்கொண்டு வந்தால் அவருக்குப் பாதி கொடுத்துவிட்டு மீதியை நாம் எடுத்துக் கொள்ளலாமே" என்றாள்.

குமரேசன்:-அப்படிச் செய்வது பிசகு; அவன் நம்மீது சந்தேகம் கொள்வான். புதையல் இருக்கிறது ஒருவருக்கும் தெரியாது. அவனுக்கு ஊரில் இருப்பது இருப்பாக இராது; வந்து விடுவான்; நிற்க மாட்டான்.

மனைவி:-நீங்கள் இப்படியே சொல்லிக் கொண்டிருந்து கைக் கெட்டியதை வாய்க் கெட்டாமல் செய்து கொள்ளப் போகிறீர்கள்.

குமரேசன்:-கிடைக்கும் படியான பிராப்தம் இருந்தால் அது எப்படியும் நமக்குக் கிடைக்கும். வீணே சஞ்சலப்படுவதில் என்ன பயன்? வந்து விடுவான்.

மனைவி: "நீங்கள் வயலுக்குப் போகாமல் போனபோதிலும், அவர் வீட்டுக்காவது போய் வந்துவிட்டாரா வென்று பார்க்கிறது தானே. நாழிகை யாகிறதே" என்றாள்.

இதைக்கேட்ட குமரேசன் "போயாவது பார்த்து விட்டு வருவோம" என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டான் முத்தையன் வீட்டிற்கு.

குமரேசன் வரட்டும். இதற்குள் ஆநந்தக் கூத்தாடின முத்தையன் ஆநந்தம் எமமட்டி லிருக்கிறதென்று பார்ப்போம்.



முத்தையன் கூத்தாடிக் கொண்டிருக்கும்போதே அவன் மனைவி "கூத்தாடுகிற திருக்கட்டும். அவுங்க வந்து கேட்டா என்னு சொல்லப் போரீங்க?" என்று கேட்டாள்.

முத்தையன்:-"அடி அசடே! அதற்கெல்லாம் யுக்தி செய்யாமலா இவ்வளவு வேலை செய்தேன் பயல் பாண்டியன். இனி இந்தக் குமரேசனைப் போல் எத்தனை குமரேசன் வந்தபோதிலும் நம்மை அசைக்க முடியாது" என்று சொல்லி மறுபடியும் கூத்தாடினான் தன் மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு.

இந்தச் சமயத்தில் வாசல் கதவு பக்கம்'கிர்ச்' என்னும் சப்தம் கேட்டது. மறு நிமிஷமே குமரேசன் பட்டா சாலையில் வந்து நின்றான். முத்தையன் மனம் திகிலடைந்தது. முகம் வெளுத்தது. அவன்மனைவியும் திகிலடைந்தாள். "கதவை யார் திறந்தது? தாளிட்டிருந்தேனே; யாராவது ஒளிந்திருந்து நடந்த விஷயங்கள் எல்லாவல்றையும் பார்த்திருந்து கதவைத் திறந்து கொண்டு போய் குமரேசனிடஞ் சொல்லி இவனை இங்கு அனுப்பி யிருப்பார்களோ, அல்லது குமரேசன் நாழிகையாய் விட்டதென்று நம்மைத் தேடிக்கொண்டு வந்து, நாம் பேசிக் கொண்டிருந்ததையும், புதையல் புதைத்ததையும் பார்த்துக்கொண்டிருந்து, இப்போது திடீரென்று வந்திருக்கிறானோ" என்று அவன் திடுக்கிட்டான்.

என்னே உலக வாழ்வு! முத்தையனுக்கு க்ஷண நேரத்திற்கு முன் இருந்த ஆநந்தம் இப்போது உத்தர க்ஷணத்தில் சங்கடமாக முடிந்தது.

முத்தையன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு "வா, குமரேசா! நான் இப்போது தான் வந்தேன். உன் வீட்டிற்குப் புறப்பட்டுக் கொண்டே இருந்தேன். நீயும் வந்தாய். அந்த மூதேவி இருட்டு என்னைச் சூழ்ந்து கொண்டதால், நான் வழி தப்பிப் போய்விட்டேன். அதனால் சீக்கிரம் வரக்கூட வில்லை. நாழிகையாய் விட்டது; போகலாமா வயலுக்கு?" என்றான்.

குமரேசன்:- "வா! போகலாம். நான் உன்னைத் தேடிக்கொண்டுதான் வந்தேன். புறப்படு" என்றான்.

இப்போது தான் முத்தையன் கூட்டில் உயிர் வந்தது. முத்தையன் தன் மனைவியிடம் புதையலை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளும்படி ஜாடை செய்துவிட்டு, குமரேசனுடன் புறப்பட்டான் வயலுக்கு. குமரேசன் மனது புதையலை அடைய வேண்டுமென்கிற ஆவலுடன் முன்னாலே நடக்க, முத்தையன் மனம் - சந்தோஷம் ஒரு புறமிருக்க, குமரேசனுக்கு எவ்வித சமாதானஞ் சொல்வது என்கிற யோசனையில் ஆழ்ந்ததாய்ப் பின் தங்கியே சென்றது. 'பணம் பல செய்யும்' என்கிறபடி, காலையில் ஒன்றுபட்டிருந்த இருவருடைய மனதையும் இப்போது அது எப்படி வேறுபடுத்தி விட்டது பார்த்தீர்களா?

அவர்கள் இருவரும் வயலை யடைந்ததும் இதுகாறும் பின்னாலே வந்த முத்தையன முன்வந்து, புதையல் இருந்த இடத்தை நாடிச் சென்(றா)ன்.

(இன்னும் வரும்)

(அ. கோபாலரத்தினம்.)

210783
00.00

# பாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா தபாற் கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் | ... | ரு. 1 8 0 |
| | பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு | ... | ரு. 2 0 0 |
| தனிச்சஞ்சிகை | ... | ... விலை | ரு. 0 2 0 |

1. பத்திரிகைக்கு ஜனவரி௴ முதல் டிசம்பர்௴ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னாடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கொள்வதானால் அணா மூன்று அதிகமாய்ச், செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### விளம்பர விகிதம்

| | |
|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | ...ரூபா 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, | ... ரூபா 5—0—0 |

காண்டிராக்ட் ரேட்டானால் சகாயமுண்டு.

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

# அமிர்தாஞ்சனம்.

சர்வ நோய்களுக்கும்




ஸித்த ஔஷதம்

விலை அணா 10 அணா 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங்செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோய்களுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்
சனமே. தலைவலி, முதுகுவலி, கீல்பிடிப்பு முத
லிய சகலநோய்களையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

**அமிர்தாஞ்சன் டிப்போ,**

**7, தம்புச்செட்டி தெருவு, சென்னை.**


Vavilla Press, Madras.